Registered as a Newspaper  பக்கங்கள் 04  விலை ரூபா: 5-00

பொதுசன நூலகம் மாநகராட்சி மன்று 7-2-1994 யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM  மக்கள் தினசரி  Peoples Daily

நாதம் 04  திருவள்ளுவர் ஆண்டு 2025  தை 25  (07-02-94)  திங்கட்கிழமை  ஓசை 354

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகங்களை மூட நடவடிக்கை

வடக்கு கிழக்கு மாகாண சபையின் கீழ் செயற்பட்டு வந்த உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகங்கள் கடந்த மாதம் முதல் மூடப்பட்டிருப்பதாக மாகாணசபையின் சுற்றறிக்கை ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது. இதனையடுத்து கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் செயற்பட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகங்களுக்கு இந்த ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை எனவும் ஊழியர்களை வெவ்வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம் செய்யும் பணிகளையும் அலுவலகத்தின் சொத்துக்களை ஒப்படைப்பது தொடர்பான பணிகளையும் (3ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி விஜேதுங்க தலைமையில் பிரச்சினைக்கு தீர்வு தயாராகிறது

### படகுகள் கடத்தல்

(கொழும்பு)

சிலாவத்துறை மீனவக் கிராமத்தினுள் இனந்தெரியாதோர் நுழைந்து அங்கிருந்து மீனவப் படகுகளையும் மற்றும் உபகரணங்களையும் எடுத்துச் சென்றதாக கொழும்பில் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இரு படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் இவ்வாறு சிலாவத்துறை மீனவக் கிராமத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

## பாராளுமன்றத்திடம் அதிகாரம்; சுதந்திரக்கட்சியின் நிலைப்பாடு இது

(கொழும்பு)

ஜனாதிபதியிடம் இருக்கும் நிறைவேற்று அதிகாரம் பாராளுமன்றத்திற்கு மாற்றப்படுமாயின் சுதந்திரக் கட்சி பாராளுமன்றம் மூலம் ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவதை ஆதரிக்கும் எனத் தெரியவருகிறது:

ஆனால் ஆளும் கட்சியான ஐ. தே. க. பாராளுமன்றத்தின்மூலம் ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டாலும் அவர் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டவராகவே இருக்க வேண்டுமென்று வலியுறுத்தி வருகின்றது.

இந்த விவகாரம் தொடர்பாக இரு கட்சிகளுக்கு இடையேயும் இணக்கப்பாடு ஏற்பட்டால் அரசியலமைப்புக்கான திருத்தம் பாராளுமன்றில் மூன்றிலிருபங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படலாம் எனவும் மேலும் கூறப்படுகிறது.

## பாராளுமன்ற தேர்தலை முன்கூட்டி நடத்த திட்டம்

(கொழும்பு)

சிறிலங்காவின் பாராளுமன்ற தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுவருவதாகத் தெரிய வருகிறது. அடுத்த ஆண்டு முற்பகுதியில் நடத்தப்பட வேண்டிய இத்தேர்தலை முன்கூட்டியே நடாத்திவிட திட்டமிடப்பட்டு வருகிறது.

ஜனாதிபதி தேர்தலையும் பொதுத்தேர்தலையும் ஒன்றாகவே நடத்தி முடித்துவிட பொதுக்கருத்துதிரட்டப்பட்டு வருவதாக அரசியலமைப்பு விவகார அமைச்சர் கே.என். சொக்ஸி தெரிவித்தார்.

இதேவேளை, பாராளுமன்றம் மூலம் ஜனாதிபதியை தெரிவு செய்வதன் மூலம் ஜனாதிபதி தேர்தலை இல்லாது செய்ய டி.பி.விஜேதுங்கா முயற்சித்து வருவதுதெரிந்ததே.

### தென்மாகாண சபை தேர்தலில்

## 'தூய' சிங்கள இனத்தவரே போட்டியிட வேண்டுமாம்

(கொழும்பு)

தென் மாகாணசபை தேர்தல் பிரசாரத்தின் போது இனத்துவேசத்தைத் தூண்டும் வகையில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் சிங்

## அமைச்சர் அத்துகோரளை தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவின் தலைமையின் கீழ் வடக்கு - கிழக்குப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர நீண்டகால, குறுகியகால நடைமுறைகளை கையாளும் அரசாங்கம் விரைவில் இதற்கு முடிவுகட்டும் இதற்கான திட்டங்கள் ஜனாதிபதியின் தலைமையின் கீழ் தயாராகிவருகிறது இவ்வாறு காணி நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி அத்துகோரளை தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில்; யுத்தத்தில் 'பின்வாங்கல்கள்' தவிர்க்க முடியாதவை. ஆனால் இவை தற்காலிகமானவை மட்டுமே. விடுதலைப்புலிகளை வெற்றிகொள்வதென ஆயுதப்படையினர் மிகவும் உறுதியாகவுள்ளனர்.

அரசாங்கம் பெரும் இன்னல்கள், நெருக்கடிகள் மத்தியிலும் ஆயுதப்படையினருக்கு தேவையான நிதியை ஒதுக்கி வருகின்றது. பல்வேறு தடைகள் மத்தியிலும் அரசாங்கம் தனது முயற்சியைக் கைவிடாது உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

'பயங்கரவாதத்தை' ஒழித்து வடபகுதியிலுள்ள மக்களின் ஜனநாயகஉரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஆயுதப் படையினர் கடுமையாக முயல்கின்றனர்.

அதிகாரங்களைப்பரவலாக்குதலும், வடக்கு மற்றும்கிழக்குப்பகுதிகள் பிரதேச அந்தஸ்துடன் இயங்குவதும் வடபகுதிப்பிரச்சினைக்குதீர்வுகாண்பதில் முக்கிய பங்காற்றும்.

'பயங்கரவாதம்' இன்று உலகம்முழுவதிலுமே காணப்படுகிறது. ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவின் தலைமை

## ஜனநாயக நீரோட்டத்திற்குவரும்வரை புலிகளுடன் பேச்சுவார்த்தை இல்லை

### ஜனாதிபதி விஜேதுங்கா தெரிவிப்பு

(சென்னை)

விடுதலைப்புலிகள் ஜனநாயக நெறிமுறைகளை ஏற்றுக் கொள்ளும் வரை அவர்களுடன் எந்தவிதமான பேச்சுவார்த்தைகளும் நடத்தப் போவதில்லை என்று ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா கூறியுள்ளார். கம்பளை மற்றும் உடுநுவர பகுதிகளில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டங்களில் உரை நிகழ்த்திய அவர் இதனை தெரிவித்தார்.

எனினும் விடுதலைப்புலிகளுடன் ஒட்டு மொத்தமான ஒரு திட்டம் பற்றி பேச்சு நடத்த அரசு தயாராக இருப்பதாக கொழும்பு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. பொருத்தமான அரசியல் சூழ்நிலை உருவாக்கப்பட்டால்

## பெரும்பான்மையினர் மரம்

...திட்டமிடப்பட்டு வருகிறது.

ஜனாதிபதி தேர்தலையும் பொதுத்தேர்தலையும் ஒன்றாகவே நடத்தி முடித்துவிட பொதுக்கருத்துதிரட்டப்பட்டு வருவதாக அரசியலமைப்பு விவகார அமைச்சர் கே.என். சொக்ஸி தெரிவித்தார்.

## 'தூய' சிங்கள இனத்தவரே போட்டியிட வேண்டுமாம்

(கொழும்பு)

தென் மாகாணசபை தேர்தல் பிரசாரத்தின் போது இனத்துவேசத்தைத் தூண்டும் வகையில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் சிங்கள இனத்தைச் சேர்ந்த பெண் வேட்பாளர் ஒருவர் தமிழர் ஒருவரை மணந்தவள் எனக் குறிப்பிடுவதைச் சுட்டிக்காட்டி விஷமத்தனமான முறையில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. அம்பாந்தோட்டை பகுதியில் ஒட்டப்பட்டுள்ள இச் சுவரொட்டிகளில் குறிப்பிட்ட அப் பெண்வேட்பாளர் தூய சிங்களவர் அல்ல என குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பெண் முன்னாள் அமைச்சர் ஒருவரின் மகள் என்பது குறிப்பிடத்தக்கது.

## தேர்தலில்வாக்களிக்குமாறு இராணுவத்தினர் மிரட்டல்

(மட்டக்களப்பு)

கிழக்கில் நடைபெறும் உள்ளூராட்சி தேர்தலில் மக்களை வாக்களிக்குமாறு படையினர் தொடர்ந்தும் மிரட்டி வருகின்றனர். ஓரிடத்தில் மக்களை கூடுமாறு மட்டக்களப்பு பகுதியில் படையினர் உத்தரவிட்டு அங்கு உள்ளூராட்சி தேர்தல் நடைபெற ஒத்துழைப்பு வழங்குமாறும் தவறுவோர் புலிகளுக்கு துணைபோனவர் எனக் கொள்ளப்படுவர் எனவும் படையினர் மிரட்டி வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல ஆலயங்களில் அமைக்கப்பட்டுள்ள ஒலிபெருக்கிகளை

(3ஆம் பக்கம் பார்க்க)

...விடுதலைப்புலிகள் ஜனநாயக நெறிமுறைகளை ஏற்றுக் கொள்ளும் வரை அவர்களுடன் எந்தவிதமான பேச்சுவார்த்தைகளும் நடத்தப் போவதில்லை என்று ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா கூறியுள்ளார். கம்பளை மற்றும் உடுநுவர பகுதிகளில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டங்களில் உரை நிகழ்த்திய அவர் இதனை தெரிவித்தார்.

எனினும் விடுதலைப்புலிகளுடன் ஒட்டு மொத்தமான ஒரு திட்டம் பற்றி பேச்சு நடத்த அரசு தயாராக இருப்பதாக கொழும்பு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. பொருத்தமான அரசியல் சூழ்நிலை உருவாக்கப்பட்டால் பேச்சு நடத்த தயாராக இருப்பதாக விடுதலைப்புலிகளின் தலைவர்கள் கொழும்பு ஆயர் ஒருவருக்கு தெரிவித்திருப்பதாகவும் இந்திய வானொலி கூறியுள்ளது.

...குப்பகுதிகள் பிரதேச அந்தஸ்துடன் இயங்குவதும் வடபகுதிப்பிரச்சினைக்குதீர்வுகாண்பதில் முக்கிய பங்காற்றும்.

'பயங்கரவாதம்' இன்று உலகம்முழுவதிலுமே காணப்படுகிறது. ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவின் தலைமையின் கீழ் வடக்கு-கிழக்கு பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு திட்டங்கள் தயாராகி வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

## பெரும்பான்மையினர் மரம் சிறுபான்மையினர் கொடி

### டி. பியின் புதிய விளக்கம்

(கொழும்பு)

பெரும்பான்மையினர் பெரிய தனி மரம். சிறுபான்மையினங்களைச் சேர்ந்தோர் அந்த மரத்தின் மீது படரும் கொடிகள். இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா அண்மையில் அநுராதபுரம் பொதுக் கூட்டத்தில் பேசும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக பெரும்பான்மையினர் சிறுபான்மையினரின் வாக்குகளில் தங்கியிருக்கும் நிலை ஏற்படக்கூடாது எனவும், பெரும்பான்மையினர் கட்டுக்கோப்புடன் செயற்பட்டால் இந்த நிலை ஏற்படாது எனவும் தெரிவித்துள்ளார்.

## அங்கிலிக்கன் குழுவினர் வெள்ளி புலிகளுடன் பேச்சு

யாழ். வந்துள்ள அங்கிலிக்கன் திருச்சபை குழுவினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் எதிர்வரும் வெள்ளியன்று பேச்சுகள் நடைபெறும் இதில் இன்றைய அரசியல் சூழ்நிலை குறித்தும் மக்கள்எதிர்நோக்கும்இன்னல்கள் குறித்தும் ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### ஜனாதிபதி தெரிவுமுறை மாற்றம்;

## டி. பி. விஜேதுங்கவின் பேச்சு பலருக்குப் பெரும் ஆச்சரியம்

(கொழும்பு)

கடந்த செவ்வாயன்று சிறிலங்கா ஜனாதிபதி டி.பி விஜேதுங்கா அநுராதபுரத்தில் ஜனாதிபதி ஆட்சிமுறை மாற்றம் குறித்து பேசியது அனைவரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளதாக பி. பி. ஸி தெரிவித்தது.

ஜனாதிபதியை பாராளுமன்றமே தெரிவு செய்ய வேண்டும் என விரும்பும் விஜேதுங்கா கடந்த காலத்தில் ஜனாதிபதித் தேர்தல்கள் போட்டி அரசியல் மனப்பான்மையையும் சிங்கள மக்களிடையே ஆழ்ந்த பிளவுகளையும் ஏற்படுத்தியதாக கூறுகிறார். இந்த வகையில் பார்த்தால், இலங்கையில் எல்லா பொதுத் தேர்தல்களையுமே ரத்துச் செய்யவேண்டும் என பி.பி.ஸி குறிப்பிட்டது.

தேசிய தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெறுவதை விட பாராளுமன்றம் மூலம் ஜனாதிபதி பதவியை எளிதில் பிடிக்கலாம் என ஐ. தே. க அதிக நம்பிக்கை கொண்டுள்ளது. பாராளுமன்றம் மூலம் ஜனாதிபதி தெரிவு செய்யப்படும் முறையை சிறிலங்கா சுதந்திரக் கட்சி நிராகரித்து விட்டது. ஜனாதிபதியின் பரந்த அதிகாரத்தை பாராளுமன்றத்திற்கு வழங்குமாறு அக்கட்சி கேட்கின்றது.

பெரும்பான்மை இனத்தவரே ஜனாதிபதியாக வரலாம் என ஜனாதிபதி விஜேதுங்கா ஆற்றிய உரை தமிழ் பகுதியில் கடும் ஆட்சேபத்தை உருவாக்கியுள்ளது. வர்த்தகத்தில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கும் இந்திய சிந்துவழி முறையைச் சேர்ந்த ஒருவர் தனிப்பட்ட முறையில் கூறுகையில் தமிழரை இரண்டாந்தர குடிமக்களாக்கும்

(3ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். இலங்கை வங்கி

## ஏ. ஆர். பி. திட்டத்தின்கீழ் கடன் வழங்க தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு ஏ. ஆர். பி, திட்டத்தின்கீழ் முப்பது விகிதக் கடன் வழங்க இலங்கை வங்கி மத்திய குழு தீர்மானித்துள்ளதாக யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

இக்கடன்கள் கடன் மீளளிப்புச் செய்யப்பட்ட அளவு வழங்கப்படவுள்ளதாகவும் இதற்கு ஒன்பது விகித வட்டி அறவிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இக்கடன் வழங்கலுக்கென சுமார் 16 மில்லியனை இலங்கை வங்கி யாழ். மாவட்டத்திற்கு ஒதுக்கியுள்ளது. இவ்வாறான கடன் வசதி

(3ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கி சூட்டுக்கு இளைஞர் காயம்

பண்ணைக் கடற் பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள்மீது மண்கும்பான் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

கடந்த இரவு 8.30 மணியளவில் நடாத்தப்பட்ட இத் துப்பாக்கிப் பிரயோகத்தின் போது காக்கைதீவைச் சேர்ந்த மகாராஜா யோகேந்திரன் (வயது 27) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் தற்போது சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## எமது சமாதான முயற்சிகளுக்கு வெளிநாட்டு நிறுவனங்கள் ஆதரவு

### மெதடிஸ்த திருச்சபை குழு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

''இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு காண்பதற்காக நாம் மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு வெளிநாட்டு நிறுவனங்கள பலதமது ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குவதாக எமக்கு உறுதி வழங்கியுள்ளன.'' இவ்வாறு மெதடிஸ்த திருச்சபையின் செயலாளர் டிலீப்பெர்னாண்டோ தெரிவித்தார்.

தற்பொழுதுயாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும்மெதடிஸ்த திருச்சபையின் நல்லெண்ணத் தூதுக்குழுவினர் நேற்று நடாத்திய பத்திரிகையாளர் சந்திப்பின் போதே இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறும் போது ''எமது சமாதான முயற்சியின் ஒரு கட்டமாக நாம் பல பௌத்த பிக்குகளைச் சந்தித்துஎமதுமுயற்சி தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளோம். சமாதான முயற்சிகளில் அரசின் செல்வாக்குள்ளபௌத்த பிக்குகளையும் ஈடுபடுத்தும் நோக்குடனேயே நாம் இவ்வாறு பேச்சுவார்த்தை நடாத்தினோம். தொடர்ந்தும் இவ்வாறு பௌத்தபிக்குகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவோம். பௌத்த பிக்குகள் சங்கத்துடனும் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளோம்.''

எமது சமாதானமுயற்சிக்கு ஆதரவு வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்கள் சமாதானத் தீர்வுக்குச் செல்லும் படி தம்மால் இயன்ற அளவு அழுத்தத்தைப் பிரயோகிக்கப் போவதாகவும் எமக்கு உறுதிவழங்கியுள்ளன.

சாதாரண சிங்கள மக்கள் முதல் இராணுவத்தில் உள்ள

(3ஆம் பக்கம் பார்க்க)

## 'மாகோ' கப்பலில் 291 தபால் பொதிகள்

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்திற்கு நேற்று பிற்பகல் 1.15 மணியளவில் வந்து சேர்ந்த 'மாகோ' கப்பலில் தபால் பொதிகள் எடுத்துவரப் பட்டுள்ளன.

தபால் திணைக்களத்திற்கென 291 தபால் பொதிகள் வந்துள்ளன. இவை இன்று கப்பலில் இருந்து இறக்கப்படவுள்ளன.

மற்றும் இக் கப்பலில் 6500 பரல்மண்ணெண்ணெய் இலவசப் பாடப்புத்தகங்கள் மற்றும் பொருள்களும் எடுத்து வரப்பட்டுள்ளன. திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன், நிர்வாக உத்தி

(3ஆம் பக்கம் பார்க்க)

## மெதடிஸ்த திருச்சபையினர் ஜனாதிபதிக்கு அறிக்கை

யாழ். குடாநாட்டிற்கு வந்துள்ள மெதடிஸ்த திருச்சபையினர் தமது விஜயத்தின் பூர்வாங்க அறிக்கையொன்றை சிறிலங்கா ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கவுள்ளனர்.

இவர்கள் இங்கிருந்தபோது விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுக்கள், மக்களின்

(3ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## கணிதம் (O/L)

உயர் சித்தியடைய கணிதம் (O/L) தனித்தனி கற்கலாம். 35 வருட அனுபவ ஆசிரியர் கற்பிக்கின்றார் வீ. கே. கந்தசாமி, புளியமிகிணற்றடி, ஏழாலை மேற்கு சுன்னாகம்.

(7432)

## பாலர் ஆசிரியர் பயிற்சி

கடைசித்தகைமை க.பொ.த. (சா|த) சனி ஞாயிறு நேரில் கற்க முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம் பாலர் ஆசிரியர் சங்கம், உயர் கலைக் கல்லூரி, ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம்.

(7427)

## அராலியூர் சுந்தரம்பிள்ளை

அகில உலக ரீதியில் நடாத்தப்பட்ட வானொலி நாடகப் போட்டியில் முதலாம் பரிசு பெற்றவர்; அவரது நாடகங்களைப் பல வானொலி நிலையங்கள் ஒலிபரப்புகின்றன: பலர் நடிக்கின்றனர். 'கெட்டிக்காரர்கள்', 'முதலாம் பிள்ளை' 30|- (7368)

## அங்கத்தவர்களுக்கு சைக்கிள் விற்பனை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் தருவித்த சைக்கிள்களை அங்கத்தவர்களுக்கு விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

150 சைக்கிள்களை சங்கம் கப்பல் மூலம் தருவித்துள்ளது.

(36)

## காய்ச்சலால் சிறுவன் பலி

(யாழ்ப்பாணம்)

இரண்டு மூன்று தினங்கள் பீடித்த காய்ச்சல் சிறுவனின் உயிரைப் பறித்தது: கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் தங்கியிருந்த வேலணையைச் சேர்ந்த தேவன் அருள் என்ற இரண்டரை வயதுச் சிறுவனே இவ்வாறு காய்ச்சலினால் உயிரிழந்தவர் ஆவார்.

(22)

கொற்றவேலைகள்

## கணக்கியல் / கணக்காய்வுப் பயிற்சிநெறி

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை, கணக்கியல், கணக்காய்வு முழுநேரப் பயிற்சி நெறியொன்றை நடாத்தவுள்ளது. கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் சித்தியடைந்த இருபாலார்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகுதியானவர்கள் 10-02-1994 காலை 9.00 மணிக்கு நடைபெறவிருக்கும் நேர்முகத் தேர்வுக்கு தங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடனும், தகுதிச் சான்றிதழ்களுடனும் கீழ்க்காணும் முகவரிக்கு வருகை தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தற்போது வேறு நிறுவனங்களில் கற்றுக் கொண்டிருப்பவர்களுக்கு மேற்படி கற்கை நெறியில் இடமளிக்கப்பட மாட்டாது.

வருகை தரவேண்டிய முகவரி;

வருவாய்ப் பகுதி,
நிதித்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
பலாலி வீதி,
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்.

(சி-8554)

## 90-ம்நாள் நினைவலைகள்



பிறப்பு: 26.08.1972

வீரச்சாவு: 11-11-1993

### கப்டன் சூரியன் (றெனோ)

(வினாயகமூர்த்தி சத்தியகரன்)

(பூநகரி முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்தார்.)

திதி: 07-02-1994

ஆண்டு நூறாக நாங்கள் அரும்பணி யாற்றினாலும்
ஈண்டுநீ செய்த தொண்டு இகத்தினில்முடியாதையா
மாண்டு நீ போகவில்லை மக்களில் வாழுகின்றாய்
நீண்டதெம் பணியிதையா நீடு செல்வோம் நீதி வெல்லும்.

-குடும்பத்தினர்

மறவன்புலோ,
'றெனோ வீதி',
சாவகச்சேரி.

(7436)

## வடமாநில சுருட்டு தயாரிப்பாளர் சங்கம் முக்கிய அறிவித்தல்

வடமாநில சுருட்டு தயாரிப்பாளர் சங்கத்தின் தீர்மானத்தின்படி இதுவரை காலமும் சங்கத்தில் பதிவு செய்து கொள்ளாத சகல சுருட்டுத் தயாரிப்பாளர்களும் 1-3-94 திகதிக்கு முன் சங்கத்தில் தவறாது பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

நன்றி

சி. சச்சிதானந்தசிவம் - தலைவர்.
த. குணரட்ணம் - செயலாளர்.

(7430)

## 90-ம் நாள் நினைவஞ்சலி



### வீரவேங்கை சுவர்ணன்

(கணபதிப்பிள்ளை கருணாமூர்த்தி)

பிறப்பு: 9 - 12 - 1976

வீரச்சாவு: 11 - 11 - 1993

திதி: 7. 2. 94

தமிழ் வாழ உயிரீந்து உரமான துளிரே
உனதாவச தமிழீழம் உருவாகும் இங்கே
உரமான துளிர் மீண்டும் மரமாகி இங்கே
பூவாகிப் பிஞ்சாகிக் காயாகிக் கனியும்

11-11-93 அன்று பூநகரி முகாம் தாக்குதலின் போது வீரச்சாவடைந்தார். இவருடன் வீரச்சாவை தழுவிக்கொண்ட அனைத்து மாவீரர்களுக்கும் எங்கள் வீர வணக்கங்கள்.

நீங்காத நினைவுகளில் சிக்கித் தவிக்கும்

- குடும்பத்தினர்

கம்பிலி வைரவர் கோவில் லேன்,
நாவற்குழி,
கைதடி.

(7435)

## 90-ம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும்



தாயின் மடியில்: 31.10.1976

தாயக மண்ணில்: 11.11.1993

### வீரவேங்கை இளஞ்செல்வன்

(வினாசித்தம்பி ஜெயக்குமார்)

பாசமிகு எம் மைந்தனே இளஞ்செல்வா
பாசம் பெரிதன்று தேசம் பெரிதென்று - நீ
நேசித்த மண்ணை மீட்டெடுக்க விரைந்தாய் - அன்று
காசினியில் பூநகரி நாயகனாய் மலர்ந்தனையோ - இன்று
உன் இலட்சியம் நிறைவேற
நாமும் உன் வழி தொடர்கின்றோம்.

இன்று அன்னாரது வீட்டில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் நண்பர்கள், சகபோராளிகள், உற்றார், உறவினர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

எழுதுமட்டுவாள் வடக்கு. - குடும்பத்தினர்.

(7408)

## நினைவு கூருகின்றோம்..

## 1994-02-07

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னார்- பரப்புக்கடந்தான் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**கப்டன் நோயல்** (சூசைப்பிள்ளை உதயஞானதாஸ் (உதயன்)- பரப்பாங்கண்டல் மன்னார்)

**லெப். கரன்மாமா** (முத்துக்குமாரு ஜெயகாந்தராசா - மயிலணிவடக்கு - சுன்னாகம் யாழ்)

மன்னார் - பெரியபண்டிவிரிச்சான் - பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**இளங்கோ-அன்ரன்** (யோசப் நிக்கலஸ் மோகன்ராஜ் - பெரியபண்டிவிரிச்சான் - மன்னார்)

**ஜீவன்** (அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் (குமார்) நெடுங்கண்டல் - மன்னார்)

கிளிநொச்சியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**சுசில்** (தானு துளசிதரன்-123, திருநகர்-கிளிநொச்சி)


கிளி - உருத்திரபுரம், கூழாவடிப்பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**நிமால்** (ராசலிங்கம் யோகநாதன்-அனிஞ்சங்குளம் யோகபுரம்-கிளி)

**ரவி** (தனிநாயகம் புவனேஸ்வரன்-உருத்திரபுரம்-கிளி)

இதேசமரின்போது நிகழ்ந்த விமானக்குண்டுவீச்சில் வீரச்சாவெய்திய-

## முதலாவது ஆண்டு அமரத்துவ அஞ்சலி



ந்த தேவன் அருள் என்ற இரண்டரை வயதுச் சிறுவனே இவ்வாறு காய்ச்சலினால் உயிரிழந்தவர் ஆவார். (22)

## தொற்றுநோய்கள் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை சாம்சன் குடியிருப்பில் தொற்றுநோய்கள் தற்போது பரவிவருகின்றன; காய்ச்சல், மலேரியாக காய்ச்சல் என்பவற்றால் பலர் இங்கு பீடிக்கப்பட்டுள்ளனர். இந் நோய்களால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட சிலர் கடந்த வெள்ளிக்கிழமை அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். செங்கண் மாரி நோயும் ஒரு சிலரிடையே இருப்பதாக கூறப்பட்டது. (22)

## பாடசாலைகளுக்கு உருக்கு அலுமாரி விநியோகம்

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணி கல்விக் கோட்டத்திலுள்ள க.பொ.த சாதாரண தர வகுப்பு வரையுள்ள மூன்று பாடசாலைகளுக்கு உருக்கு அலுமாரிகள் யாழ். கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளன. மருதங்கேணி இந்து த.க. பாடசாலை, நாகர் கோவில் மகாவித்தியாலயம், ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை ஆகியவற்றிற்கே உருக்கு அலுமாரிகள் தலா ஒன்று வழங்கப்பட்டுள்ளன. (36)

## போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கணக்காய்வுப் பரீட்சகர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு குறித்த திகதிக்குள் விண்ணப்பிக்க முடியாமல் போனவர்கள் 2 வாரங்களுக்குள் அதற்கு விண்ணப்பிக்கலாம். இதுபற்றிய மேலதிக விபரம் பெற விரும்புபவர்கள் அரசாங்க அதிபரிடம் பெற்றுக் கொள்ளலாம். (இ)

---

அமரர் உயர்திரு.

# இராமு சண்முகம் பேரம்பலம் (E.S.P.)

அவர்கள்

காரைநகர் வாரிவளவு

மலர்வு: **26-04-1926**

உதிர்வு: **19-01-1993**

திதி **7-02-1994**



ஆண்மையில் உருவமாகி அழகிலும்
பெருமையாகி
மண்ணிலே வாழ்ந்த காலை மற்றவர்க்கு
நன்மை செய்தீர்
உம்மை நாம் போற்றி நிற்போம்
உம் வழியை நாடி நிற்போம்
பெம்மானின் பாதம் சேர்ந்த
பேரம்பலப் பெருநிதியே

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் ஆசியும் அறிவுரைகளும்
என்றும் எம்மை வழிநடத்தும்
உங்கள் ஆன்மா சாந்திக்காக
நாம் அனைவரும் இறைவனை உளமார
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்

**E. S. பேரம்பலம் அன் கோ**
50, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**E. S. பேரம்பலம்**
குடும்பத்தினர்.
90, பஜார் லேன் யாழ்ப்பாணம்.

(7426)

---

...இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**நிமால்** (ராசலிங்கம் யோகநாதன்-அனிஞ்சங்குளம் யோகபுரம்-கிளி)

**ரவி** (தனிநாயகம் புவனேஸ்வரன்-உருத்திரபுரம்-கிளி)

இதேசமரின்போது நிகழ்ந்த விமானக்குண்டுவீச்சில் வீரச்சாவெய்திய-

**இளங்கோ** (ஆறுமுகம் சிறிவேந்தன் - முல்லைத்தீவு வீதி, பரந்தன் - கிளி)

கிளி-கனகபுரம் பகுதியிற் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டுவீச்சின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**அன்சார்** (கணபதிப்பிள்ளை கருணாகரன்- 48 | 3, 2-ம் படிவம் பரந்தன் - கிளி)

1989ஆம் ஆண்டு திருமலை - மூதூர் முட்டுச்சேனைப் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**லெப். லிங்கம்** (குழந்தைவேல் கோடீஸ்வரன் திருமலை)

கிளி-கோணாவில் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின்போது விழுப்புண் அடைந்தநிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**லெப். விசுவாசம்** (விசுவலிங்கம் புத்திரசீலன்- ஆனந்தபுரம்-புதுக்குடியிருப்பு- மணலாறு)

மட்டு - கொடுவாமடுப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 5 தமிழர்கள்;

1990ஆம் ஆண்டு யாழ் - பழைய பூங்காப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த-

**2-ம் லெப்.றேகன்** (திருநாவுக்கரசு சிவபாலன் கருங்காலி, காரைநகர்-யாழ்)

1992ஆம் ஆண்டு மட்டு - மயிலவெட்டுவான், கரடியனாற்றுப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**ரவீந்திரன்-ரவீந்தர்** (சபாரத்தினம் உருத்திரன்- வி. வி- வீதி. பெரியநீலாவணை - மட்டு)

**அருள்நாதன்** (தம்பிப்பிள்ளை பேரின்பராஜா- வெல்லாவெளி - மட்டு)

**மயூராத்-ஜஸ்ரின்** ( - ரமேஷ் புன்னைச்சோலை மட்டு)

1993ஆம் ஆண்டு கிளாலிக்கடற்பரப்பில் பயணிகள் படகுமீது சிறிலங்காக் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் பலியான 08 பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(இ-8553)

### சிந்தனைக்கு

தெளிவான சிந்தனைக்கு பின் தேர்ந்து முடிவெடுத்து வகுக்கப்படும் தத்துவார்த்த அடிப்படை இல்லாவிடின் கிளர்ச்சி, வெறும் கோஷங்களின் கூக்குரலாக சீர்குலைந்துவிடும்

— லெனின்

**ஈழநாதம்**

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 07-02-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05


## சுமுகமான சூழ்நிலை

கடந்த இரண்டு வருடங்களாக இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வு ஒன்று காணப்படவேண்டும் என்ற குரல்கள் ஓரளவு தொடர்ச்சியாகக் கேட்டவண்ணமே உள்ளன. இக்கோரிக்கைகள் இலங்கைக்கு உள்ளிருந்தும், வெளியில் இருந்தும் எழுப்பப்பட்டு வந்திருப்பினும், இவற்றில் எவையும் பலமானதாகவோ, அன்றிச் சிறிலங்கா அரசாங்கத்திற்கு நிர்ப்பந்தத்தைக் கொடுக்கக் கூடியவையாகவோ இருக்கவில்லை என்பதும் வெளிப்படையானதாகும்.

இதேவேளை சிறிலங்கா அரசாங்கமும் பேச்சிற்கு அரசியல் தீர்வு பற்றி அடிக்கடி கூறிக் கொண்டாலும், அதில் அதற்கு நம்பிக்கையில்லை என்பதை அதன் நடவடிக்கைகள் தெளிவாகவே புலப்படுத்துகின்றன. அத்தோடு, பேச்சுக்கள் குறித்தும், இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் பற்றியும் சிறிலங்கா அரசியல் தலைவர்கள், இராணுவத் தளபதிகள் ஒருவருக்கு ஒருவர் முரண்பாடாய், நேரத்திற்கு நேரம் பேசிக் கொள்வதும் உண்டு.

ஆனால், இவர்கள் எவரும், இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் சமாதான தீர்வைக் காண்பதற்கு முன் முயற்சிகள் எதையும் எடுப்பதாக இல்லை. இவர்கள் அரசியல் தீர்வு பற்றிப் பேசினாலும் அவை தமிழ் மக்கள் மனதில் நம்பிக்கைத் தன்மையை வளர்க்கக் கூடியதாக இருக்கவில்லை. இவர்கள் தமிழ் மக்களின் குரல்வளையை நெரித்துக் கொண்டே பேச்சுவார்த்தைகள் பற்றி கதைக்க முற்படுகின்றனர். ஆனால், இது ஒரு போதும் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையை உருவாக்கப் போவதில்லை. அத்தோடு, இவ்வாறான சூழ்நிலையில் பேச்சுவார்த்தை ஒன்று நடைபெறுமானாலும், அது பிரச்சினைக்கு நியாய பூர்வமான தீர்வு எதையும் கண்டுவிடப் போவதுமில்லை

தமிழ் இனமானது, கடந்த காலத்தில் பலதடவை சிங்கள அரசியல் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய வரலாறு உண்டு. இவை சில வேளைகளில் பேச்சுக்களின் போது சிங்களத் தலைவர்களால் குழப்பியடிக்கப்பட்டதும் உண்டு. சிலவேளைகளில், உடன்பாடுகள் ஏற்பட்ட பின்பு முறிக்கப்பட்டதும் உண்டு. இந்

# ஆற்றலுள்ள தலைமை இன்று எதிர்க்கட்சியில் இல்லை,

**- காமினி திசாநாயக்கா**

(கொழும்பு)

சிறிலங்காவின் எதிர்க்கட்சிகள் கடந்த காலம் பற்றி ஆராய்வதிலேயே அக்கறை காட்டுகின்றன. ஆனால் கடந்த காலம் இறந்து போன ஒன்றாகும். இவ்வாறு காமினி திசாநாயக்கா கூறியுள்ளார். அண்மையில் ஐ. தே. கட்சியில் மீண்டும் இணைந்து கொண்டுள்ள அவர் லங்காபுவத் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் மேலும் கூறியதாவது, எதிர்க்கட்சிகள் தேசியப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை எனவும், அதுபற்றி அக்கறை காட்டுவதாக இல்லை எனவும் குற்றம் சாட்டினார்.

எதிர்க்கட்சிகள் பெரும்பாலும் குழம்பிப் போய் இருக்கின்றன என்பதுடன் எதிர்காலத்தில் புறக்கணிக்கக் கூடியளவுக்கு சிறிய தொகையினர் மட்டுமே தேறக்கூடிய பாதையை நோக்கியே அவை செல்கின்றன. எதிர்க்கட்சியில் ஆற்றலுள்ள தலைமைத்துவம் ஒன்றில்லை என்பதுடன், தெளிவான கொள்கை கோட்பாடுகளையும் அவை கொண்டிருப்பதாக இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் பற்றிய கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த அவர் விடுதலைப் புலிகளுடன் ஒருநாள் இணக்கமான தீர்வு ஒன்று காணப்படவேண்டியது அவசியம். அதுதான் ஒரு யதார்த்தமான வழியாகும் எனப் பதிலளித்தார்.

அதாவது விடுதலைப் புலிகள் பலவீனப்பட்டு விடுவார்கள் எனக் கருதுகிறீர்களா எனக் கேட்டபோது, அது மேற்கொள்ளப்படும் முயற்சியின் ஒரு பகுதியே எனினும் அரசியல் தீர்வு ஒன்று தான் இதற்கு வழி என்பதை அவர்களும் உணரவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

## மேஜர் கணேஷ் உருவப்படம் நேற்று திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் மத்திய குழு உறுப்பினரும் முன்னாள் மூதூர் பிராந்திய தளபதியுமான மேஜர் கணேஷின் உருவப்படம் நேற்று மாலை திருநெல்வேலியில் திறந்து வைக்கப்பட்டது. கவிஞர் நிலாதமிழின்தாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசியக்கொடியை திருமலை மாவட்ட சிறப்புத் தளபதி குணம் ஏற்றிவைத்தார்.

மங்கள விளக்கினை திருமலை தொடர்பக பொறுப்பாளர் மூர்த்தி ஏற்றினார். உருவப்படம் திருமலை மாவட்ட தளபதி குஞ்சனால் திறந்து வைக்கப் பட்டது. தொடர்ந்து போராளிகளும் மக்களும் மலர் அஞ்சலி செலுத்தினர். அதனையடுத்து நடந்த வீரவணக்க கூட்டத்தில் கடற்புலிகள் அரசியல் பயிற்சிப் பள்ளி பொறுப்பாளர் வாஞ்சிநாதன், யாழ் மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் இளையவன், அரசியல் பயிற்சி பள்ளி பொறுப்பாளர் அரசண்ணா, மகளிர் அமைப்பின் யாழ் மாவட்ட பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி ஆகியோர் உரையாற்றினர்.

இதில் உரையாற்றிய கடற்புலிகளின் அரசியல் பயிற்சிப் பள்ளிப் பொறுப்பாளர் திரு. வாஞ்சிநாதன் சிங்களத் தேசியக் கொடி எரிப்பில் லெப்டினன்ட் சீலனுடனும் திருநெல்வேலி தாக்குதலில் தலைவருடனும் இணைந்து பங்கு பற்றியவர் மேஜர் கணேஷ் ஆரம்பத்தில் ஐந்து போராளிகளுடன் மூதூரைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தவர் அவர் என்றார்.

யாழ் மாவட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வி விடுதலைப் போராட்டத்தில் தன்னை ஒரு முதுகெலும்பாக இணைத்துக் கொண்டவர் மேஜர் கணேஷ் என்றார். தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் பல வெற்றிக்கான தளங்களை ஏற்படுத்தித் தந்தவர் மேஜர் கணேஷ் என அரசியல் பயிற்சிப் பள்ளி பொறுப்பாளர் திரு. அரசண்ணா தெரிவித்தார். யாழ் மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. இளையவன் தனதுரையில் போராட்ட வளர்ச்சிக்கு அன்று இந்த வீரர்கள் இட்ட அத்திவாரமே காரணம் என்றார்.

### ஏ ஆர் பி

தொடர்ந்தும் வருடம் தோறும் மேற்கொள்ளப்படுமெனவும் இலங்கை வங்கி வட்டாரங்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா. தி)

### டி பி

பேச்சு இது என்றார்.

### இல்ல விளையாட்டு போட்டி

(கொழும்புத்துறை)

யாழ். புனிதபத்திரிசியார் கல்லூரியின் மாணவர்களுக்கான பொது இல்ல விளையாட்டுப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இந்நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக அருட்திரு இமானுவேல் அடிகளாரும், கௌரவ விருந்தினராக திரு. வி. ரி ஆர். மோகன் (சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்) அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (24)

### மழையினால் வயல்கள் பாதிப்பு

(குருநகர்)

கடந்த மூன்று தினங்களாக குடாநாட்டின் சில இடங்களில் மீண்டும் மழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக அறுவடை செய்யப்படாத வயல்களில் மழைநீர் தேங்கிநின்று முற்றிவிட்ட கதிர்களைப் பழுதடையச் செய்யும் அபாயம் தோன்றியுள்ளதென விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (21)

### பேராசிரியர் நேசையா நினைவு ஆராதனை

அமரத்துவம் எய்திய பேராசிரியர் கு. நேசையாவுக்கு அஞ்சலிசெலுத்தும் ஆராதனை இன்று மாலை 4.30மணியளவில் சுண்டிக்குழியிலுள்ள பரியோவான் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி ஆராதனையில் கொழும்பு அங்கிலிக்கன் திருச்சபையின் பேராயர்அதிவண

## தொழிலாளர் பெயர் வாக்காளர் டாப்பிலில்லை

(பதுளை)

சுமார் எட்டாயிரத்துக்கு அதிகமானதோட்டத் தொழிலாளர்களின் பெயர்கள வாக்காளர் இடாப்புகளில் புதிதாக சேர்க்கப்படாமல் நீக்கப்பட்டிருப்பதாக ஊவா மாகாணசபையின் இ. தொ. கா. உறுப்பினரான சிவம் லோகநாதன் கூறியுள்ளார்.

பதுளை மாவட்டத்தில் கடந்த டிசம்பருடன் முடிவுற்ற தேர்தல் வாக்காளர் பதிவில் பல குறைபாடுகள் இருந்ததாகவும், உதவி தேர்தல் ஆணையாளர் வாக்காளர்களை சந்திப்பதற்காக அனுப்பிய கடிதங்களில் பல தொழிலாளர்களுக்கு விநியோகிக்கப்படாமல் தோட்டங்களிலேயே தேங்கிக் கிடப்பதாகவும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

## ஆபத்தான நிலைமையில் மருதங்கேணிப் பாலம்

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணிப் பாலம் மிகவும் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது.

அண்மையில் பெய்த பெருமழை காரணமாக பாலமும், கடனீரேரிக்கு ஊடாகச் செல்லும் வீதியும், வெள்ளத்தினால் அரிக்கப்பட்டு மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது.

இப்பாதையால் சென்ற லொறிகள் குடை சாய்ந்ததையடுத்து, இப்பாதைக்கு ஊடாக லொறிப் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.

உடனடியாக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாவிடில், போக்குவரத்து முற்றாக தடைப்படும் ஆபத்து ஏற்படலாமென அஞ்சப்படுகின்றது. (36)

## வவுனியா தமிழ் யுவதிகள் மூவரைக்காணவில்லையாம்

### பெற்றோர் பொலிசில் புகார்

வவுனியா நகரிலிருந்து பேராதனைக்கு புறப்பட்டுச் சென்ற மூன்று தமிழ் யுவதிகள் காணாமற் போயிருப்பதாக வவுனியா சிவப்பிரகாசம் வித்தியாலயத்தை சேர்ந்த ஞானநாயகம் வவுனியா பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார்.

இவர் தமதுபுகாரில்மேலும் குறிப்பிடுகையில்; தமது மகளான திருமகள் என்பவர் கௌரி வாமதேவன், மற்றும் பகீரதி வாமதேவன் ஆகியோருடன் கடந்த ஜனவரி 2ஆம் திகதியன்று பேராதனைக்கு புறப்பட்டு சென்றதாகவும், அதன்பின் அவர்கள் பேராதனைக்கு சென்றடையவில்லை எனவும், வவுனியாவுக்கும் திரும்பவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

## அகதிகள் பயண பொதிகள் பொலிசார் சோதனை

(மன்னார்)

தமிழ் நாட்டிலிருந்து கப்பல் மூலம் தலைமன்னார் வரும் அகதிகளின் பொதிகள் பாதுகாப்பு என்பதன் பெயரால் பொலிசாரினால் உடைத்து சோதனை செய்யப்படுவதாக புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்த அகதிகளை அழைத்து வருவது தொடர்பாக ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகராலயம் இந்திய இலங்கை அரசுகளுடன் செய்து கொண்ட உடன்பாடுகளின் அடிப்படையில் பொதிகள் அவர்கள் மீளக் குடியேறும் வரை உடைத்துச் சோதனை செய்யப்படலாகாது

எனினும் தலைமன்னார் இறங்கு துறையில் வைத்தே பொலிசார் பாதுகாப்பு காரணங்களை சுட்டிக்காட்டி இப்பொதிகளை உடைத்து சோதனை செய்வதால் அகதிகள் அவற்றை எடுத்துச் செல்வதில் பலவித சிரமங்களையும் அனுபவிக்கின்றனர் எனக் கூறப்படுகிறது.

# பொஸ்னியாவில் ஏவுகணைதாக்குதல்

சிங்கள அரசியல் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய வரலாறு உண்டு. இவை சில வேளைகளில் பேச்சுக்களின் போது சிங்களத் தலைவர்களால் குழப்பியடிக்கப்பட்டதும் உண்டு. சிலவேளைகளில், உடன்பாடுகள் ஏற்பட்ட பின்பு முறிக்கப்பட்டதும் உண்டு. இந்நிலையில், தமிழர்கள் சிங்களத் தலைவர்களுடன் இனிமேல் பேசுவதானால், பேச்சுவார்த்தையால் பலன் பெற முடியும்என்ற நம்பிக்கையைத் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தக்கூடிய வகையில் காரியங்கள் இடம்பெற வேண்டும்

ஆனால், சிங்கள அரசியல்வாதிகள் கடைப்பிடிக்கும் கொள்கைகள் பெரிதும் முரண்பாடானது. பேச்சிற்கான எந்தவித நம்பகத் தன்மையையும் ஊட்டக் கூடியனவாக இல்லை. மறுவளமாக தமிழர்களை அச்சுறுத்துபவையாகவும், அவர்களின் நிலங்களையும், உயிர்களையும் பறிப்பனவாகவே உள்ளன. இந்நிலையில், சமாதான முயற்சிகளில் தமிழ் மக்கள் எந்தளவிற்கு நம்பிக்கை வைக்க முடியும்?

இவ்வாறானதொரு நம்பிக்கையற்ற அரசியல் சூழ்நிலையில்தான் பல நல்லெண்ணத் தூதுக் குழுக்கள் யாழ்ப்பாணம் வந்து சென்றுள்ளன. வந்துள்ளன இந் நல்லெண்ண தூதுக்குழுக்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டங்கள் எதையும் கொண்டுவந்ததாக தகவல் இல்லை. ஆயினும், இக்குழுக்கள் இனப்பிரச்சினைக்கு ஒரு சமாதான ரீதியான முறையில் தீர்வுகாண வேண்டும் என அவாக் கொண்டுள்ளன என்பது மறுப்பதற்கில்லை.

ஆனால், இவர்களின் முயற்சிகள் சிறிலங்கா அரச தரப்பில் எந்தளவிற்கு வரவேற்கப்பட்டுள்ளன என்பதற்கு நம்பிக்கை ஊட்டும் சமிக்ஞைகள் எவையும் கிடைக்கவில்லை. இதேவேளை, இக்குழுக்கள் இப்பிரச்சினை குறித்து சிங்கள அரசியல்வாதிகள், இராணுவத்தளபதிகள் ஆகியோருடன் தொடர்பு கொண்டு பேசியதாகவும் அறிய முடிகின்றது. இருப்பினும் சமாதான முயற்சிகளின் பலன் எந்தளவிற்கு உபயோகமானதாக இருக்கும் என்பதில் சந்தேகங்கள் தவிர்க்க முடியாது எழுகின்றது.

இந்நிலையில், சமாதான முயற்சியில் ஈடுபடுபவர்கள் தமது நடவடிக்கைகள் எந்தளவிற்கு பயன்படக்கூடியவை என்பதை சிறிலங்கா அரசிடம் ஊர்ஜிதப்படுத்திக் கொள்ள வேண்டும். அத்தோடு, இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட இருதரப்பும் எதுவித அழுத்தங்கள் இன்றியும், சம அந்தஸ்து நிலையில் இருந்து பேச்சுக்கள் நடத்தும் சுமுகமான ஒரு சூழ் நிலையை உருவாக்க வேண்டும். இதுவே சமாதான முயற்சியில் ஈடுபடுவோர் முன்னுள்ள முக்கிய மானதும் சிக்கலுமான விடயமாகும்.

அவ்வாறு இல்லாது, சிறிலங்காவின் போலியான சமிக்ஞைகளை மட்டும் நம்பி சமரசமுயற்சிகளில் ஈடுபடுவது பெரும்பயன் அளிக்கக் கூடிய தொன்றல்ல.

...மெனவும் இலங்கை [illegible] வட்டாரங்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா, தி)

## டி பி

பேச்சு இது என்றார்.

மேற்கு ராஜதந்திரி ஒருவர் கருத்து தெரிவிக்கையில் ஜனாதிபதியின் இப் பேச்சுக்களை அதிக முக்கியம் கொடுத்து எடுக்கத் தேவையில்லை என்றார்.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் சிங்கள மக்களை கவர இத்தகையபேச்சுக்களை தொடர்ந்து ஆற்றுவார். இந்த உத்தி மூலம் ஜனாதிபதி பதவியை காத்துக்கொள்ளலாம் என அவரும் அவரது ஆதரவாளர்களும் கருதுகின்றனர். ஆனால் இந்தவழி இலங்கையில் சிறுபான்மையினரை ஒடுக்கப்படும் உணர்வை ஏற்படுத்தும் என பி.பி.ஸி குறிப்பிட்டது.

## தேர்தலில்

யும் படையினர் தமது பிரசாரத்திற்கு பயன்படுத்துகின்றனர். தேர்தலுக்கு ஒத்துழைப்பு தர மறுப்போர்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என இதன் மூலம் எச்சரிப்பு அறிவிப்புகளும் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

## உள்ளூராட்சி

மேற்கொள்ளுமாறும் அச்சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

பிரதேச செயலகங்களின் கீழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் பணிகளை பகிர்ந்தளிக்கும் திட்டத்தின் கீழேயே இந்த அலுவலகங்கள் மூடப்படுவதாக அச் சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்தே மூடப்படும் அலுவலகங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களை விடுவிப்பதற்கான பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதாக கூறப்படுகிறது.

இதேவேளை மாநகரசபை, நகரசபை மற்றும் பிரதேச சபைகள் என்பன தொடர்ந்தும் செயற்படும் எனவும் கூறப்படுகிறது.

யளவில் சுண்டிக்குழியிலுள்ள பரியோவான் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி ஆராதனையில் கொழும்பு அங்கிலிக்கன் திருச்சபையின் பேராயர் அதிவண கென்னத் பெர்னாண்டோவின் துணைவியார் திருமதி சித்திரா பெர்னாண்டோ பேராசிரியரின் வாழ்வுக்கு சான்று பகரவுள்ளார். தென்னிந்திய திருச்சபையின் புதிய யாழ்ப்பாணஆயர் அதி.வண. ஜெபநேசன் அடிகளாரின் அருளுரையும் இடம்பெறும்.

## எமது

சிப்பாய்கள்வரை சமாதானத் தீர்வையே விரும்புகின்றனர்.

இச் சமாதான முயற்சியின் ஒரு கட்டமாக பௌத்தபிக்குகள் மிக விரைவில் நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நாம் இந்த சமாதான முயற்சியை ஆரம்பித்து வைத்து விட்டு பின்னணியில நிற்போம்

எம்முடன் நடாத்திய பேச்சுவார்த்தைகள் குறித்தும் சமாதான முயற்சிகள் குறித்தும் அரசியல் செல்வாக்குள்ள மகாநாயக்கர் களுக்கு எடுத்துக் கூறுவதாக பிக்குகள் பலர் எம்மிடம் உறுதிவழங்கியுள்ளனர்.

யுத்தம் காரணமாக வட பகுதி மக்கள் அனுபவித்து வரும் துன்ப துயரங்கள் குறித்து எமது வெளிநாட்டுத் தொடர்பு சேவை மூலம் வெளியுலகுக்குத் தெரியப்படுத்தவுள்ளோம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க),(நி)

## மாகோ

யோகத்தர் திரு. விக்னேஸ்வரமூர்த்தி ஆகியோர் கப்பலுக்குச் சென்று பொருள்களை பாரமேற்றதையடுத்து முதலில் எண்ணெய் பரல்கள் இறக்கப்பட்டன. யாழ் போதனா வைத்தியசாலைக்கு மருந்து வகைகள் எரிபொருள் என்பனவும் இதில் வந்தன. (யோ)

# பொஸ்னியாவில் ஏவுகணைதாக்குதல் 66பேர்பலி; 200 பேர் காயம்!

(சரயேவோ)

பொஸ்னியாவில் நெரிசல் மிகுந்த சந்தைப் பகுதியொன்றில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட எறிகணைவீச்சுத் தாக்குதலினால் 66பேர் கொல்லப்பட்டதுடன் 200க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

வடக்கே சேர்பியர் ஆக்கிரமிப்பிலுள்ள பகுதியிலிருந்து இக்குண்டு ஏவப்பட்டதாக அரச அதிகாரிகள் கூறியுள்ளனர். இந்தக் குண்டு எங்கு தயாரிக்கப்பட்டது என்பதை அறிவதற்கான பூர்வாங்க பரிசோதனைகளில் ஐ நா. துருப்பினர் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை இத் தாக்குதல் ஒரு கோழைத்தனமான செயலாகும் என்று வர்ணித்துள்ள அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் அடுத்த நடவடிக்கை பற்றி நேச நாடுகளுடன் ஆராயப்பட இருப்பதாகவும் தெரிவித்தார். பிரிட்டன், பிரான்ஸ் உட்பட பல நாடுகளும் இத்தாக்குதலை கண்டித்துள்ளன. ஐ.நா. பொதுச்செயலாளரும் இத்தாக்குதலை வன்மையாக கண்டித்துள்ளார்.

## நாடுதிரும்பினார்

(டில்லி)

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் சுவிட்சர்லாந்து, மற்றும் ஜேர்மனிக்கான ஆறு நாள் உத்தியோகபூர்வ விஜயங்களை முடித்துக் கொண்டு நேற்று நடு திரும்பினார். அவரை விமான நிலையத்தில் வைத்து வெளியுறவு அமைச்சர் தினேஷ்சிங் மற்றும் உயரதிகாரிகள் சகிதம் வரவேற்றார்.

## மெதடிஸ்த

நிலை, மக்கள் எதிர்பார்ப்புகள் போன்றவை உள்ளடங்கியதாக இவ் அறிக்கை அமையும் என மெதடிஸ்த திருச்சபையினர் தெரிவித்தனர்.

இதேவேளை வேறு சிலருக்கும் இவ் விஜயம் தொடர்பாக தாம் அறிவிப்பர் என தெரிவித்த போதும் யாருக்கு அறிவிப்பர் என வெளியிட மறுத்துவிட்டனர். (க),(நி)

# தரையிலிருந்து வானிற்கு செலுத்தும் ஏவுகணை

## இந்தியா வெற்றிகரமாக பரீட்சிப்பு

(டில்லி)

இந்தியாவின் 'ஆகாஸ்' எனப்படும் ஏவுகணை நேற்று முன்தினம்கரையோரமான சண்டிப்பூரில் பரீட்சித்துப்பார்க்கப்பட்டுள்ளது. இப் பரீட்சார்த்த முயற்சி வெற்றியளித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தரையிலிருந்து ஆகாயத்திற்கு ஏவப்படும் இவ் ஏவுகணை 650 கிலோ கிராம் நிறையுடையது. 25 கிலோ மீற்றர் தூரம்பாய்ந்துசெல்ல வல்லது.

இதன்மூலம் இவ்வாறான ஏவுகணைத் தயாரிப்பு தொழில்நுட்பம் தெரிந்த நான்காவது நாடாக இந்தியா வருகிறது. அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் ஆகியவற்றுக்கு அடுத்து இந்தியா இத் தொழில் நுட்பத்தில் வெற்றி பெற்றுள்ளது.

# ஸிரினோவ்ஸ்கிக்குமுக்கியம் அபாயத்தை அதிகரிக்கும்

## ரஷ்யப் பிரதமர் தெரிவிப்பு

(பிளெட்)

ஸிரினோவ்ஸ்கியின் நடவடிக்கைகளுக்கு உலகப் பத்திரிகைகள் அதிக முக்கியம் கொடுப்பது அபாயத்தை அதிகரிக்கச் செய்யும் என்று ரஷ்யப் பிரதமர் செர்னோ மிர்டின் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; பாராளுமன்றத் தேர்தலில் ஸிரினோவ்ஸ்கி வெற்றி பெற்றுள்ள போதும் கூட நீண்ட கால அடிப்படையில் ரஷ்ய மக்களிடையே அவருக்குச் செல்வாக்கு இருக்காது. ஏனெனில் பாஸிஸம் என்ன என்பதை மற்றெல்லாரையும் விட ரஷ்ய மக்கள் நன்கு உணர்வார்கள். எனவே உலக நாடுகளிலும், எமது நாட்டிலும் இருக்கும் நிருபர்கள் ஸிரினோவ்ஸ்கிக்கு உதவாவிட்டால் அபாயம் ஏற்பட இடமில்லை எனவும் தெரிவித்தார்.

இதேவேளை ஸ்லோவேனியாவுக்கு விஜயம் செய்துள்ள ஸிரினோவ்ஸ்கியை நாட்டைவிட்டு வெளியேறுமாறு அந்நாட்டரசு கோரிக்கை விடுத்ததை அவர் உதாசீனம் செய்ததை அடுத்து ஸ்லோவேனிய அரசு அங்குள்ள ரஷ்ய தூதுவரை அழைத்துப் பேச்சு நடத்தியுள்ளது.

அத்துடன் ஸிரினோவ்ஸ்கி பெல்கிரேட்டிற்கு விஜயம் செய்து சேர்பியத் தலைவர்களுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பெருமதிப்புக்குரிய விரிவுரையாளர்
திரு இ. மருதலிங்கம் அவர்களின்
அன்புத் தந்தை
**திரு. மூ. இராமநாதர்**
அவர்களின்

மறைவால் துன்பமுறும் அன்பர்கள் அனைவருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு மறைந்த பெரியாரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

பலாலி ஆசிரிய கலாசாலைக்
குடும்பத்தினர்.

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
06.02.94 (7442)

## நன்றி செலுத்தும் ஆராதனை

### குணசேகரம் நேசையா

மறுமைக்குள் பிரவேசித்த பேராசிரியர் குணசேகரம் நேசையா அவர்களின் வாழ்க்கைக்காகவும் பணிகளுக்காகவும் நன்றி செலுத்தும் ஓர் ஆராதனை இன்று 7.2.94ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு சுண்டிக்குளி புனிதர் யோவான் ஸ்நானகர் ஆலயத்தில் நடைபெறும் அனைவரும் அன்பாய் அழைக்கப்படுகின்றனர். தனிப்பட்ட செவ்விகள் அனுப்பப்படா.

தேவநேசன் நேசையாவும்
குடும்ப உறுப்பினர்களும்

20, சோமசுந்தரம் வீதி,
சுண்டிக்குளி. (7386)

## 90-ம்நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்
10
—
11
—
1973

தாயக மண்ணில்
11
—
11
—
1993

# சமாதானத் தீர்வுகாணப் பேச்சு

## செல்லச்சாமி அழைப்பு

விரிசல்களை மேலும் விரிவுபடுத்தாமல் சந்தித்துப்பேசி சமாதானத் தீர்வைக்காண வேண்டும் என்று இ.தொ.கா பொதுச் செயலாளர் வலியுறுத்திக் கூறியுள்ளார். அண்மையில் செல்லச்சாமி கொழும்பில் பத்திரிகைகளுக்கு வெளியிட்ட ஓர் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது இன்னமும் காலம் கடந்து விடவில்லை இ.தொ காவும், நமது சமுதாயமும் எதிர் வரும் ஆண்டுகளில்சிறப்புடன் விளங்க நாம் பேதங்களை மறந்து கைகோர்த்து செயற்படுவது அவசியம். மனமிருந்தால் மார்க்கமுண்டு.

கொலைஞனுக்குகூடதனது நிலையை எடுத்துச் சொல்ல உரிமை கொடுக்கப்படுகின்றது ஆனால் எந்தக் குற்றமும் செய்யாத எந்த முடிவையும் மீறாத எட்டுப் பேருக்கும் அவர்களுடன் சேர்த்து எனக்கும் எந்த விளக்கமும்கேட்காமல் சொல்லவும் வாய்ப்பளிக்காமல்தீர்ப்பு கூறிவிட்டார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

### உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**06.02.1994**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 639

வடபகுதிக்கு உள்வேவந்த வாகன இலக்கங்கள்:
27-1375, 27-7653, 27-9771, 27-2056, 27-5822
26-5202, 26-8138, 26-4579, 27-0849, 24-6639
24-4108, 24-5041, 24-8079, 22-6897, 22,8777
43-3576, 41-4194, 40-2677.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
24-5707, 24-5164, 26-4450, 26-2585, 24-5703
27-5633, 26-5517, 26-3130, 27-4673, 28-7662
42-9326, 28-1928, 41-8155, 24-3412, 24-4701.

# 90-ம் நாள் வீரவணக்கம்



**லெப். அம்பிகை**
குமாரசாமி கமலாம்பிகை
(தனங்கிளப்பு சாவகச்சேரி)
பிறப்பு: 30.10.64
வீரச்சாவு: 11.11.93



**2-ம் லெப். ரத்தினம்**
குமாரசாமி சிவசோதி
தனங்கிளப்பு சாவகச்சேரி
பிறப்பு: 27.03.1971
வீரச்சாவு: 11.11.93

ஒரு கொடியில் பூத்த இருமலர்கள்
ஒரு குடும்பத்தின் குலப்பறவைகள்
களம் காண விரைந்தனர்
களமாடி வென்றனர்
நாகதேவன் துறையில்
எதிரி படை வென்றீர்
தமிழீழ தாக இதயங்களில் பதிந்தீர்
பூநகர் மண்ணில் வரலாறு படைத்த
பூமகளிர் உம்மை நெஞ்சிடை கொண்டோம்.

அன்று இவர்களுடன் வீரச்சாவெய்திய அனைத்து வேங்கைகளையும் நினைவு

## விற்பனைக்கு வந்துவிட்டது!

எமது அடுத்த தொகுதி
புத்தகங்கள் அனைத்தும்
விற்பனைக்கு வந்துவிட்டன.

நாடவேண்டிய இடம்
**தமிழ்த்தாய் புத்தகசாலை**
191, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
சி- (8556)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### பதவி வெற்றிடம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து கீழே குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் 1994 - 02 - 28 ஆம் திகதிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதவி: கருவிப்பொறிவலர் தரம் II (நிரந்தரம்)

சம்பள அளவுத்திட்டம்:
ரூபா 2575-11 x 55-3,180/-மாதமொன்றுக்கு. (இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி உட்பட ஏனைய படிகளுடன் 1994-12-31 வரை அடிப்படைச் சம்பளத்தின் 25 சதவீதத்திற்குச் சமமான தொகையும் வழங்கப்படும்.)

தகைமைகள்: 1. குறைந்த பட்சம்8 ஆம்வகுப்பில்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். 2. ''அமுக்கம் பதிகருவி'' போன்ற துல்லிய மானிகளைப் பராமரிப்பதிலும், திருத்துவதிலும், அரசாங்கத் திணைக்களமொன்றிலோ, அரசகூட்டுத்தாபனம்ஒன்றிலோ அல்லது அங்கீகரிக்கப்பட்டபொறியியல் நிறுவனமொன்றிலோகுறைந்த பட்சம்5வருடஅனுபவம்உடையவராக இருத்தல் வேண்டும்.

தேர்வு: தொழிற் தேர்வின் மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டசபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும். (இவ்விண்ணப்பதாரிகளுக்குவயதெல்லை கட்டுப்பாடாக அமையாது) அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றவர்களும்இப்பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் விண்ணப்பிக்கலாம் அவர்களுக்கும் வயதுக் கட்டுப்பாடு எதுவுமில்லை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப் பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளைச் சிரேஷ்டஉதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக் கட்டளை/ தபாற் கட்டளையுடன் 23x10 ச.மீ. அளவுடைய, சுயமுகவரியிட்ட; ரூபா 1/- முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல்வேண்டும். விதிக்கபெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப் பெறும்விண்ணப்பங்களும், கேட்கப்பட்ட விபரங்கள்

10 — 11 — 1973



11 — 11 — 1993

## 2-ம் லெப்டினன்ட் மறமகள்

**[செல்வி மகேஸ்வரி ரங்கநாதன்]**

**இணுவில்**

பாசமல ராய்மலர்ந்த தங்கையேநீ
பைந்தமிழீ ழம்காக்கப் பூன கரியில்
நேசமுடன் பெண்புலியாய்த் துவக்கு மேந்தி
நீசப்படை தனைவதைத் தாய்மற மகளே!
ஆசையுடன் உனைத்தூக்கி வளர்த்த அண்ணா
அன்புமுகம் காணாமல் துடிது டித்தான்
தேசநலம் கொண்டுநீ ஆவி தந்தே
திகழும்மா வீரர்களுள் ஒருத்தி ஆனாய்.

இவவுடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களையும் இந் நாளில் நினைவு கூருகின்றோம்.

உனது அன்பு
அம்மா,
அண்ணன்மார்,
சகோதரி, தம்பிகள்.

டிஸ்பென்சறி ஒழுங்கை,
இணுவில் தெற்கு,
இணுவில். (7439)

---

## மரண அறிவித்தல்

### திருமதிசின்னத்துரை கமலபூரணம்

வண்ணார்பண்ணை நாச்சிமார்கோவிலடியைச்சேர்ந்த சின்னத்துரை (பத்தர்)மனைவி கமலபூரணம்(5-2-94) சனி அன்று காலமாகிவிட்டார். இவர் மலேசியா வல்லிபுரம் வண்ணார்பண்ணை ஆறுமுகம், மீசாலை வைத்திலிங்கம், நல்லூர் அமரேசர் ஆகியோரின் சகோதரியும், துரைலிங்கம், துரைராசா, துரையம்மா துரைராணி, கமலராணி ஆகியோரின் தாயாரும், கதிரவேலு, விஜயரத்தினம், சந்திரமலர், நகுலேஸ்வரி ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் தகனக் கிரியைகள் (06-02-94) ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
சி. கதிரவேலு
(மருமகன்)

(சி-8555)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது

---

ஒரு கொடியில் பூத்த இருமலர்கள்
ஒரு குடும்பத்தின் குலப்பறவைகள்
களம் காண விரைந்தனர்
களமாடி வென்றனர்
நாகதேவன் துறையில்
எதிரி படை வென்றீர்
தமிழீழ தாக இதயங்களில் பதிந்தீர்
பூநகர் மண்ணில் வரலாறு படைத்த
பூமகளிர் உம்மை நெஞ்சிடை கொண்டோம்.


அன்று இவர்களுடன் வீரச்சாவெய்திய அனைத்து வேங்கைகளையும் நினைவு கூருகின்றோம்.

தனங்கிளப்பு,
சாவகச்சேரி, (5090)

பெற்றோர்,
சகோதரர்கள்:

---

## ஓராண்டு நினைவஞ்சலி



### தில்லையம்பலம் பொன்னுச்சாமி

மலர்வு: 25-05-1928

உதிர்வு: 19-01-1993

ஆண்டொன்று சென்றாலும் அன்புமுகம்
மாறுமோ, கருணையின் வடிவாய்
அன்போடெம்மை அரவணைத்த ஐயா
எப்போ உங்கள் முகம் காண்போம்
உங்கள் குரல் கேட்போம் ஐயா
உங்கள் பிரிவால் வாடும்.

மனைவி - பிள்ளைகள்
மருமக்கள் - பேரப்பிள்ளைகள்

(7440)

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் பொன்னுச்சாமி சுதாகரன்

பிறப்பு: 27 - 02 - 1972

இறப்பு 04 - 04 - 1992

அன்பு மழைபொழிந்து அமுதமொழி பேசி
ஆசைக் கரம் நீட்டி சிரிப்பில் மகிழவைத்து
துளிர்விட்ட இளமைக் கனவுகள் யாவும்
காயாகி கனியுமுன்னே விதையாகி
விட்டாயே
நீயில்லா உலகினிலே நிம்மதி எமக்கேது
சிரித்த உன் முகம் காண எம் சிந்தை
துடிக்கிறதே
ஆயிரம் ஆண்டுதான் சென்றாலும்
உம் பசுமை
நினைவுகள் மறந்திடுமா எம்மனதில்
இறப்பிலும் இறைவனுடன்
இணைத்திடவே
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

தாய், சகோதரர்கள்
மைத்துனர்மார், மருமக்கள்,
நண்பர்கள்.

கைதடி,
நாவற்குழி,

---

கத்திணைக்களமொன்றிலோ, அரசகூட்டுத்தாபனம்ஒன்றிலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் நிறுவனமொன்றிலோ குறைந்த பட்சம்5வருடஅனுபவம்உடையவராக இருத்தல் வேண்டும்.

தேர்வு: தொழிற் தேர்வின் மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

குறிப்பு: தொழில்நுட்பக் கல்லூரியொன்றிலிருந்து பெறப்பட்ட தொழில் சான்றிதழை வைத்திருப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயது: விண்ணப்ப முடிவு திகதியில் 40 வயதிற்கு மேற்படலாகாது.

ரூபா 1/- முத்திரையொட்டப்பட்ட சுடித உறையையும் அனுப்புதல் வேண்டும். விதிக்கபபெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும், கேட்கப்பட்ட விபரங்கள் தெளிவாகக் குறிப்பிடாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி.
1994-02-03 (சி-8522)

---

## 45-ம் நாள் நினைவஞ்சலி



தாயின் அரவணைப்பில்: 02.09.1987

தாயக மண்ணின் அரவணைப்பில்: 25.12.1993

### சிவகுமாரன் தனுசியா

(O. L. R. மாணவி)

மரணிக்கும் வயது இது ஆகுமோ?
தரணியும் இதை வரவேற்குமோ??
தமிழனாய் பிறந்ததால் - இது
விதியும் ஆகுமோ???

தனு உன் 'பிஞ்சு' ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்,

அப்பா, அம்மா, அம்மம்மா, குமுதினி அக்கா சின்னக்கா யாழினி, தர்சினி அக்கா, கஜன் அண்ணா, தம்பி அஜன், அன்பழகன் அண்ணா (மாவீரர் படிப்பகம் கிளிநொச்சி), பெரிய மாமா குடும்பத்தினர் (ஜேர்மனி), பெரியம்மா குடும்பத்தினர், நாதன் மாமா (ஜேர்மனி), பாமா அன்ரி (ஜேர்மனி).

ச. சிவகுமாரன்
இ: மின்சாரசபை,
வேலணை - வட்டு.

29, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
(7441)